1987 மார்ச் 5]

மலிவு விலையில் பொதுமக்களுக்கு கோதுமை விநியோகம்.

63—(* வினா எண். 11261) திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலிவு விலையில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்ய மத்திய அரசு மாநில அரசுக்கு கோதுமை ஒதுக்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) பொது விநியோக முறையில் வழங்க மைய அரசு குவிண்டால் ரூ. 190 என்ற விலையில் மாதமொன்றுக்கு 30,000 டன்கள் கோதுமை வழங்குகிறது. இவ்வரசு அதை கிலோ 2.05 என்ற விலையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகிக்கிறது. இதைத் தவிர ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாடு திட்டம் அமுலில் உள்ள பகுதிகளில் விநியோகிப்பதற்கு குவிண்டால் ரூ. 125 என்ற விலையில் மைய அரசு கோதுமையை வழங்குகிறது. அது, மைய அரசின் அறிவுரைப்படி குடும்ப அட்டைதாரர்களுக்கு கிலோ ரூ. 1 50 என்ற விலையில் விநியோகிக்கப்படுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு வழங்கும் 30,000 டன் கோதுமையும் போதுமானது என்று இந்த அரசு கருதுகிறதா? மேலும் ஒதுக்கீடு வேண்டுமென்று தமிழக அரசு கோரி இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு மாதம் ஒன்றுக்கு 30,000 டன் கோதுமையை ஒதுக்கினாலும் நமக்கு மாதம் ஒன்றுக்கு 6,000 டன்னுக்கு மேல் செலவு ஆவதில்லை. ஆக, அவர்கள் ஒதுக்குவதையேகூட நாம் செலவிடவில்லையென்றால் அதற்குக் காரணம் நம்முடைய மக்கள், கோதுமையை அவ்வளவாக விரும்பவில்லை, அரிசியைத் தான் பெரும்பாலான மக்கள் உணவாகப் பயன்படுத்துகிறார்கள். மேலும் அரிசி போதுமான அளவு கிடைக்கிறது என்பதும் இப்போதுள்ள நிலைமை.

அமராவதி ஆற்றிலிருந்து மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியக்கிராமங்களுக்கு குடிநீர் வழங்குதல்.

64—(* வினா எண். 3915) திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியம் அமராவதி ஆற்றிலிருந்து நல்லண்ணகவுண்டன் புதூருக்கு குடிநீர் வழங்கும் திட்டம் மயிலாபுரம் மடத்தூர் ஆகிய கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் வேலை எந்த நிலையில் உள்ளது?

(ஆ) இத்திட்டத்தில் மயிலாபுரம், மடத்தூர் கிராமங்களையும் இணைக்கும் திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியம், நல்லண்ணகவுண்டன் புதூருக்கு, அமராவதி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் முடிக்கப்பெற்று, குடிநீர் வழங்கப்பெற்று வருகிறது. வழங்கப்பெறும் குடிநீர் நல்லண்ண கவுண்டன் புதூருக்கு மட்டுமே போதுமானதாக உள்ளதால் மயிலாபுரம், மடத்தூர் ஆகிய குடியிருப்புகள் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை.

(முற்பகல் 10-10)

திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நல்லண்ண கவுண்டர் புதூர் திட்டநீரானது ஒரு சிறிய கிராமத்திற்குத்தான் போய்க்கொண்டிருக்கிறது. அதிலிருந்து இரண்டு பர்லாங் தூரம் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தினால் மடத்தூர், மயிலாபுரம் ஆகிய இரண்டு ஊர்களுக்கும் கொடுக்கலாம். அதுசம்பந்தமாக போன வருடத்திலே சட்டசபையிலே நான் ஒரு கேள்வி கேட்டிருந்தேன். அதையும் சேர்த்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். அந்த ஊருகளுக்குத் தனியாக ஒரு திட்டமாவது வகுத்து அந்த இரண்டு கிராமங்களுக்கும் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, மடத்தூரிலே இருக்கின்ற மக்கள் தொகையே 1,421. அதற்கு இரண்டு திறந்த வெளிக் கிணறுகள் இருக்கின்றன. கையிறைப்பான் பொருத்தப்பட்ட ஆழ் துளைக் கிணறு ஒன்று இருக்கிறது. ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதியிலேயும் தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டி ஒன்றும் கட்டப்பட்டு அதுவும் தண்ணீர் வழங்கி வருகிறது. ஆகவே இந்த ஊருக்கு மட்டும் பயனளிக்கும் வகையில் தனியாகக் குடிநீர்த் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர்: தலைவர் அவர்களே, என்னுடைய உடுமலை தொகுதியில் பூலாங்கிணறு கூட்டுக் குடிநீர்த் திட்டம், மானுப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம், உடுமலைக்கு அடிஷனலாக இன்னொரு திட்டம் என்று இந்த மூன்று திட்டங்கள் பற்றி கிட்டத்தட்ட நான்கு வருடங்களாக வேலை செய்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால் உடுமலையிலே இன்றைக்குத் தண்ணீர்ப் பஞ்சம் கடுமையாக இருக்கிறது. ஒரு குடம் தண்ணீரை நாற்பது பைசாவுக்கு ஏழை எளிய மக்கள் வாங்கிச் சாப்பிடுகிறார்கள். அந்த நிலையிலே இந்தத் திட்டங்களைச் சீக்கிரம், விரைவாக அமல்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

1987 மார்ச் 5]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொன்னதுபோல திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. உடுமலைப்பேட்டையில் தண்ணீர் தட்டுப்பாடு என்று சொல்கிறார்கள். அதற்கான தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மருதவஞ்சேரி ஊராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி.

65—(* வினா எண். 7958) திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியத்தில் மருதவஞ்சேரி ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, கட்டி முடிக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் இன்னும் தனியார் ஒருவரின் நெல் கிட்டங்கியாகப் பயன்பட்டுவருவது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருதவஞ்சேரியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 1978 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒப்பந்தக்காரரால் கட்டி முடிக்கப்பட்டது. மேற்சொன்ன பணி தொடர்பான இறுதிப் பட்டியலுக்கு (Bill) நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணி, உதவிக்கோட்டப் பொறியாளரால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேல்நிலைத் தொட்டி அமைப்பில் செய்த சில வேலைகள் விடப்பட்டிருக்கின்றன என்றுகூறி பட்டியல் தொகையை ஒப்பந்தக்காரர் பெற்றுக்கொள்ள மறுத்ததுடன், மேல்நிலைத் தொட்டி கட்டிடத்தின் சாவியையும் தர மறுத்துவிட்டார். மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி நெல் கிடங்காகப் பயன்படுத்தப்படவில்லை. தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு 4-7-1986 முதல் மேல்நிலைத் தொட்டியின் பொறுப்பை குடவாசல் ஊராட்சி ஒன்றியம் ஏற்றுக்கொண்டு 17-7-1986 முதல் மேல்நிலைத் தொட்டி மூலம் பொது மக்களுக்கு குடி தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவிக்கின்றபொழுது பில் பட்டியல் வழங்கப்படாத காரணத்தால் அந்த வாட்டர் டேங்க் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படாமல் இருந்ததாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அந்த வேலையைச் செய்த அந்த கான்ட்ராக்டர் ஆக்கிரமணம் செய்யவில்லை. ** (கூச்சல்-குழப்பம்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.